# அம்மா உந்தன் அன்பினிலே

அம்மா உந்தன் அன்பினிலே
அருள்வாய் எமக்கு அடைக்கலமே

1
இறைவன் படைத்த எழிலே
இயேசுவைத் தந்த முகிpலே
தூய்மை பொழிpயும் நிலவே
துணையே வாழ்வில் நீயே

**2**
புவியோர் எங்கள் புகழே
புனிதம் பொங்கும் அழகே
உம் மகன் புதிய உறவில்
எம்மையும் வதியச்செய்வாய்

**3**
மீட்பின் முதற்கனி ஈன்ற
மலரே எங்கள் மகிழ்வே
இயேசுவின் காலடித் தடமே
எம்மையும் நடத்திச் செல்வாய